2014 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

196—

புதிய கட்டடம்

*41743—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியம், கல்லேரிப்பட்டியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, ஆரணி வட்டாரம் கல்லேரிப்பட்டு கிராமத்தில் பழுதடைந்துள்ள மையத்தை இடித்துவிட்டு புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலான பழைமையான அந்த அங்கன்வாடிக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2014 ஜூலை 21

மேலும், அந்தப் பகுதியில் ஆதி திராவிடர் இனமக்கள் அதிகம் வாழ்கின்றார்கள். அந்த அங்கன்வாடி மையத்தில் சுமார் 130 குழந்தைகள் இருக்கின்றார்கள். அதில் பத்து குழந்தைகள் இலங்கை அகதிகள் முகாமிலிருந்து வந்த குழந்தைகள். அந்த அங்கன்வாடிப் பகுதியில் உள்ளே புக முடியாத அளவிற்கு மிகவும் துர்நாற்றம் வீசுகின்றது. இந்த ஆண்டே உடனடியாக அந்த அங்கன்வாடி மையத்தைக் கட்டித் தர வேண்டும். அதோடு கடந்த ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் இதே ஒன்றியத்திற்குட்பட்ட தென்றல் நகர் ஆதி திராவிடர் பகுதியில் இருக்கக்கூடிய அங்கன்வாடி மையம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அது உடனடியாகக் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையும் இந்த ஆண்டே கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி புதிதாகக் கட்டப்பட இருக்கிற அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை 563. அதிலே கல்லேரிப்பட்டு கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த அங்கன்வாடி மையமும் அடங்கும். அதை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

2014 ஜூலை 21]

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல சொந்தக் கட்டடம் இல்லாமல் செய்யாறு ஒன்றியத்திற்குட்பட்ட மேல்நகரம்பேடு காலனி, மேல்மட்டை விண்ணமங்கலம் காலனி, பில்லாந்தி, தேவனாத்தூர், முனுக்கப்பட்டியில் இருக்கக்கூடிய மேல்புத்தூர், ஆரணி ஒன்றியத்திற்குட்பட்ட வேதாஜிபுரம், உகையூர் போன்ற இடங்களில் வசிக்கக்கூடிய மக்கள் தருகின்ற தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களிலே, அங்கன்வாடி மையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அவை இந்த ஆண்டே சொந்தக் கட்டடங்களிலே இயங்குவதற்கு அரசு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகை மற்றும் வாடகையில்லாக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்று 15,313 அங்கன்வாடி மையங்களுக்குப் பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த மையங்கள் பழுதடைந்த அல்லது வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*